# அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

## நினைவு நாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப் 4 -

பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் 'அண்ணா வழியில் அயராது உழைப்போம்! என குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**அண்ணா வழியில் அயராது உழைப்போம்!**

**தந்தை பெரியார் குறித்து பேரறிஞர் அண்ணா கூறியது:**

**"எது நேரிடினும் மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன் என்ற உரிமைப் போர் பெரியாருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப்பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர்."**

**தந்தை பெரியாரின் புகழொளியையும் அறிவொளியையும் தந்து நம்மை ஆளாக்கிய தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவுக்குப் புகழ்வணக்கம்!**

**நம்முடைய நோக்கம் பெரிது! அதற்கான பயணமும் பெரிது!**

**வம்பிழுக்கும் வீணர்கள் தெம்பிழந்து ஓடுவார்கள்; நாம் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று இலட்சியப் பயணத்தில் வெல்லப் பாடுபடுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி பெருங்காடு முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களின் 11ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நடைபெறும் மாட்டுவண்டி எல்கைப் பந்தயத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்து சிறப்பித்தார்.

### மனவளர்ச்சி குன்றியோர் மாற்றுத்திறனாளிகள் வாழ்விலும் ஏற்றம் தரும் திராவிடமாடல் அரசு!

# கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் மறுவாழ்வு இல்ல கட்டிடம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினர்!

திருவாரூர், பிப். 4 -

இந்தியாவே போற்றும் வகையில் அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும்,"எல்லோருக்கும் எல்லாம்" எனும் கோட்பாடு கொண்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மனவளர்ச்சி குன்றியோர் மாற்றுத்திறனாளிகள் வாழ்விலும் ஏற்றம் தரும் அரசாகவும் திகழ்கிறது.

கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் மனநலம் பாதிக்கப்பட்டோர் ,மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம் அமைக்க திராவிட மாடல் கொடுத்த திட்டத்தின் அடிப்படையில் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா , பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் அடிக்கல் நாட்டியதோடு மாற்றுதிறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.

திருவாரூர் மாவட்டம்,கோட்டூர் வடக்கு ஒன்றியப்பகுதியில் உள்ள கண்டமங்கலம் ஊராட்சி சேரியில் மனநலம் பாதிக்கப்பட்டோர் , மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம் அமைக்கும்கட்டிடப்பணிகளுக்கு தொழில் முதலீடு மற்றும் ஊக்குவிப்பு துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் ஆகியோர் அடிக்கல்நாட்டினர். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, ஒன்றிய செயலாளர் பால.ஞானவேல், மனோலயம் தொண்டு நிறுவன இயக்குனர் முருகய்யன் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

மேலும் மன்னார்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் 70 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.48 லட்சத்து 57 ஆயிரத்து 800 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ ஆகியோர் வழங்கினர்.

13 பயனாளிகளுக்கு விபத்து இறப்பு நிவாரண தொகைக்கான ஆணையினையும், மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரிய கல்வி உதவித்தொகை 7 நபர்களுக்கும், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டவருக்கான தண்ணீர் படுக்கை பெறுவதற்கான நிதியுதவி 7 நபர்களுக்கும் வழங்கப்பட்டது.

பின்னர் மன்னார்குடி வட்டம், காரிக்கோட்டை ஊராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட சமுதாய கூடம் மற்றும் ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடையினையும் திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், திடக்கழிவு மேலாண்மையில் தன்னிறைவு பெறுவதற்காக கிராமப்புறங்களில் குப்பைகளை விரைந்து கொண்டு செல்வதற்கு ஏதுவாக மன்னார்குடி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு 24 எண்ணிக்கையிலான மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகளை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா வழங்கினார்.

நிகழ்வுகளில் மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, ஒன்றிய செயலாளர்கள் பால.ஞானவேல், வீ. எஸ்.ஆர்.தேவதாஸ், டி. எஸ்.டி. முத்துவேல்,நா.கவியரசு, சித்தேரி சிவா, கே. வி.கே. ஆனந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன்,நகர்மன்ற தலைவர்மன்னை.த.சோழராஜன்,நகர செயலாளர் வீரா.கணேசன், சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் காஞ்சித்துரை, கலைவாணி மோகன், மாவட்ட அமைப்பாளர்கள் பகலவன், வி.கே.முருகானந்தம், பி.ஜி.ஆர்.ராஜாராமன் மற்றும் கழக நிர்வாகிகள் ,கழக தோழர்கள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வே. முனியாண்டி

**பிப்ரவரி 4 (2016)**



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

முகவை மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் – ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட அவைத் தலைவர் – திருப்பரங்குன்றம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைமைக் கழகப் பேச்சாளராக செயல்பட்டு, கழகக் கொள்கைகளை தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் பிரச்சாரப் பணியாற்றினார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் பேரணி!



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம் கவரப்பாளையத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஆண்டிமடம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ரெங்க.முருகன், ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.கலியபெருமாள், ஒன்றிய அவைத் தலைவர் இராமதாஸ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இளங்கோவன், முன்னாள் ஒன்றியகுழு உறுப்பினர் பத்மநாபன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சதீஷ் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்கம் ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் நகரச் செயலாளர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணாவின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.இராமச்சந்திரன், து.செல்வம், மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, உள்ளிட்ட நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் மாநகர கழக செயலாளர்கள் டிகேடி மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன் முதலில் சந்தித்த இடமான திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும் மற்றும் திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரியில் கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் தலைமையில் சென்ட்ரல் தியேட்டரில் இருந்து அமைதி ஊர்வலம் சென்று கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். உடன் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், நாகராஜ், வெங்கடேசன், கிருஷ்ணன், கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் , செந்தில் , கிருபாகரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.